முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

I.P. No. 28/2019

2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 01–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: திரு.தீபன் (எ.ம.சா.2) தொழில்:

த/பெ: பாலினம்:

கிராமம்: வயது:

மாவட்டம்: நாள்: 01–04–2026

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் DBS வங்கி பழனி கிளையில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். லெட்சுமி விலாஸ் வங்கியானது எங்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் அருள்முருகன் டிரேடர்ஸ் மற்றும் அருள்முருகன் ஸ்டீல்ஸ் நிறுவனங்களின் கணக்கு விபரங்களை கொண்டுவரும்படி சொல்லப்பட்டியிருந்தது. அதன்படி மேற்படி நிறுவனங்களின் கணக்கு விபர பட்டியல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அருள்முருகன் டிரேடர்ஸ் மற்றும் அருள்முருகன் ஸ்டீல்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டியிருந்த கடனை அவர்கள் 2019ல் முழுமையாக திருப்பி செலுத்திவிட்டார்கள்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் DBS வங்கி பழனி கிளையின் மேலாளர் என்ற முறையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். TMB வங்கி சம்பந்தமான விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ஓம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.